# சிவதோத்திரத் திரட்டு



தொகுப்பாசிரியர்
ம.ஜெகநாதன் (ஜெக்கி)

# சிவதோத்திரத் திரட்டு



தொகுப்பாசிரியர்
ம.ஜெகநாதன் -ஜெக்கி-

இலவச வெளியீடு

## நூல் விபரம்


நூலின் பெயர்: சிவதோத்திரத் திரட்டு

தொகுப்பு:
நூல் வடிவமைப்பு:
அட்டை வடிவமைப்பு: ம.ஜெகநாதன்

கணனி தட்டச்சு:
ஒப்பு நோக்கல்: திருமதி.தர்மராணி ஜெகநாதன்

இலவச வெளியீடு: திரு.திருமதி. இரா.உதயகுமார் இராஜேஸ்வரி (ஜேர்மனி)

அச்சுப்பதிவு: கௌரி அச்சகம், கொழும்பு-13

பதிப்பு: செப்டம்பர் 2019

பக்கங்கள்: 6+46


**ஆசிரியரின் ஏனைய நூல்கள்** (இலவச வெளியீடு)

வைரவர் பக்தி மாலை – டிசெம்பர் 2018

நவராத்திரி பாமாலை – மே 2019



# ஆசியுரை

உ

சிவமயம்

ஹர ஹர சங்கர!

ஜெய ஜெய சங்கர!!

உலகிற்கு தாய் தந்தை பரமசிவன். “அம்மையே அப்பா ஒப்பிலா மணியே” என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். சிவம் என்றால் உண்மை, அறிவு, இன்பம் என்று பொருள்.

சிவ வழிபாடு நிம்மதியைத் தரவல்லது. கால பயத்தைப் போக்கு வது. சிவனைத் துதிக்கின்ற பாடல்கள் இலட்சோப இலட்சம். அவற்றை ஓதியுணர ஏழேழு ஜென்மம் வேண்டும்.

அன்பர் ம.ஜெகநாதன் அவர்கள் தெரிந்தெடுத்த பாடல்களை வகைப்படுத்தி “சிவதோத்திரத் திரட்டு“ என்னும் பெயரில் நூலாகத் தொகுத்துத் தருகின்றார். இது அவரது மூன்றாவது தொகுப்பு. இயந்திர கதிபட்ட வாழ்க்கைப் பயணத்தில் கிடைக்கின்ற சிறிது ஓய்வு நேரங்களில் இது போன்ற தொகுப்பு நூல்கள் பெரும் வரப்பிரசாதம். நூல் சிறப்பாக வெளிவர எனது ஆசீர்வாதங்கள் உரித்தாகுக.

சுபம் ஸத்யம் சிவம் சுந்தரம்.

பிரம்மஸ்ரீ. இராமச்சந்திர இராமலிங்க குரு
பிரதம குரு
வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயம்.



# என்னுரை

குறுகியகால இடைவெளியில் எனது தொகுப்பில் “வைரவர் பக்திமாலை” மற்றும் “நவராத்திரி பாமாலை” நூல்கள் இலவச வெளியீடாக வெளிவந்துள்ளன. இவை மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தது. மக்களிடம் இருந்து வெளிப்பட்ட ஆரோக்கியமான பதில் வினைதான் இந்த நூலை தொகுத்து தரும் உந்துதல். முன்னைய நூல்களில் பெற்ற அனுபவம் இந்நூல் ஆக்கத்திற்கு பெருதும் உதவியிருக்கிறது. பயன்படக்கூடிய வகையில் நூல்களை தொகுத்து தருவதை பெருமையாகவும், பெரும் பாக்கிய மாகவும் கருதுகிறேன்.

சிவவழிபாட்டிற்குரிய விடயங்களை திரட்டி சுருக்கமாக தருகிறது இந்நூல். அன்றியும் சிவவழிபாட்டிற்கு ஏற்றவாறு பாடல்களும் தொகுத்துத் தரப்பட்டுள்ளது. புரிதலுக்கான விபரக் குறிப்புக்களும் ஆங்காங்கே பாடல்களுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

பாடல் தெரிவுகள், கணனி தட்டச்சு, ஒப்புநோக்கல் போன்ற இன்னோ ரன்ன பணிகளில் என்னுடன் பயணித்த எனது மனைவி திருமதி. தர்மராணி அவர்களுக்கு எனது அன்பு நிறைந்த நன்றிகள்.

சமூக உணர்வாளர் திரு.திருமதி. இரா. உதயகுமார் இராஜேஸ்வரி தம்பதியினரின் (ஜேர்மனி) நிதிப்பங்களிப்பில் இந்நூல் இலவச வெளியீடாக மலர்கிறது. தம்பதியினருக்கு எனது நன்றிகள்.

வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ இரா. இராமலிங்கசர்மா அவர்களின் ஆசியுரை வழமை போன்று இந்நூலிற்கும் அணி சேர்க்கிறது. ஆசியுரை கேட்கும் போதெல்லாம் மிகுந்த கரிசனையுடன் நூலிற்கான ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்வார். அவருக்கு எனது மனமார்ந்த நன்றி.

“சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்”

என்னும் திருமூலரின் வாக்குப்படி சிவபெருமானைச் சிந்தையில் நிறுத்தி சீரிய வாழ்வைப் பெறுவோம்.

– ம. ஜெகநாதன், வயாவிளான்

# சிவாலய தரிசனம்

1. சிவாலயத்திற்குச் செல்லும்போது நீராடி உலர்ந்த ஆடை தரித்து வீபூதி தரித்து தூய்மையாகச் செல்ல வேண்டும்.
2. தேங்காய், பழம், பாக்கு-வெற்றிலை, மலர்கள் வைத்து இடுப்புக்கு மேலே உயர்த்தி ஏந்தி செல்லவேண்டும்.
3. திருக்கோயிலை அடைந்ததும் கோபுரத்தை இரு கைகயாலும் சிரசில் வைத்து வணங்கி, பலிபீடத்தை அடையவேண்டும்.
4. முதலில் பலிபீடத்தையும் கொடி மரத்தையும் ரிஷப தேவரையும் வணங்க வேண்டும்.
5. ஆடவர் தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு ஆகிய எட்டு உறுப்புக்களும் நிலத்தில் தோயும்படி அட்டாங்க வணக்கமும், பெண்கள் தலை, கையிரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து உறுப் புக்கள் நிலத்தில் தோயும்படி பஞ்சாங்க வணக்கமும் செய்தல் வேண்டும்.
6. கொடி மரத்தைக் கடந்து உள்ளே சென்றபின் எந்த இடத்திலும் வீழ்ந்து வணங்குதல் கூடாது.
7. நமஸ்காரம் செய்தபின் திருநாமம் உச்சரித்து பூமியைப் பார்த்தவாறு அடிமேல் அடிவைத்து மெல்ல வலம் வரவேண்டும். பலிபீடத்தையும், இடபத்தையும் சேர்த்து வலம் வரவேண்டும்.
8. வலம் முடிந்து துவாரபாலகரையும், திருநந்திதேவரையும் வணங்கி சிவபெருமானை தரிசிப்பதற்கு அனுமதி பெற்று உள்ளே செல்லவேண்டும்.
9. விநாயகர் சந்நிதி அடைந்து கைகூப்பி தியானித்து தோத்திரம் செய்ய வேண்டும்.
10. சிவபெருமான் சந்நிதி அடைந்து இரு கைகளையும் சிரசிலே குவித்து வணங்கி, பஞ்ச தோத்திரங்களையும் சொல்லவேண்டும்.
11. அர்ச்சகரைக் கொண்டு வில்வத்தினால் அருச்சனை செய்து, பழம் முதலிய வற்றை நிவேதித்து சிவனின் தரிசனம் பெறவேண்டும்.
12. பின்பு வீபூதி, சந்தனம் வாங்கி தரித்துக்கொண்டு, சண்டேசுவரர் சந்தி அடைந்து தோத்திரம் செய்யவேண்டும்.
13. பின்னர் நந்திதேவரையும் தரிசித்து பலிபீடத்திற்கு இப்பால் மும்முறை நமஸ்கரித்து சிவபெருமானை தியானித்து வீடு திரும்ப வேண்டும்.
14. மூலவருக்கு தீபாராதனை நடக்கும்போது கண்ணை மூடி வணங்காதீர்கள். இறைவனை கண் குளிர தரிசித்து வழிபடுங்கள்.
15. கருவறையில் இருந்து அருள்பாலிக்கும் தெய்வத்திற்கு அபிஷேகம் செய்யப்படும் போதும், திரையிட்டு சுவாமிக்கு பிரசாதம் வழங்கும் போதும் தெய்வத்தை வணங்கக் கூடாது.
16. ஆலயத்தின் பிரதான வாயில் தவிர மற்ற வாயில்களால் ஆலயத்திற்குள்ளே செல்லக் கூடாது.
17. கோவில் கதவுகள் மூடப்பட்டிருக்கம் போது தெய்வத்தை வணங்கக் கூடாது.
18. ஆலயத்தில் இருந்து வீட்டிற்கு செல்லும்போது சற்று அமர்ந்து செல்ல வேண்டும்.
19. ஆலயத்திற்குச் சென்று வீடு திரும்பும் வரை வீண் வார்த்தைகள் பேசு வதைத் தவிர்த்து இறைவனின் திருநாமத்தை உச்சரித்து வரவேண்டும்.



## உள்ளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| 1. முன்னுரை ... ... ... ... | 01 |
| 2. சிவராத்திரி ... ... ... ... ... ... ... | 02 |
| 3. சிவராத்திரி விரதம் ... ... ... ... ... ... | 02 |
| 4. சிவராத்திரி வகைகள் ... ... ... ... ... | 03 |
| 5. சகலதும் அரனே ... ... ... ... ... ... | 05 |
| 6. சிவபூசையின் பலன்கள் ... ... ... ... | 05 |
| 7. சிவபுராணம் ... ... ... ... ... ... ... | 06 |
| 8. திருக்கேதீச்சரப் பதிகம் (ஏழாம் திருமுறை) ... | 09 |
| 9. திருக்கேதீச்சரப் பதிகம் (இரண்டாம் திருமுறை) ... | 11 |
| 10. திருஞானசம்பந்தர் தேவாரம் ... ... ... | 13 |
| 11. ஓம் நமச்சிவாய நமஹ ... ... ... ... | 15 |
| 12. நமச்சிவாயத் திருப்பதிகம் ... ... ... ... | 19 |
| 13. தீராப்பிணிகளை தீர்க்கும் பதிகம் ... ... ... | 20 |
| 14. பல்பெயப்பத்து தேவாரத் திருப்பதிகம் ... ... | 22 |
| 15. போற்றித் திருஅகவல் ... ... ... ... ... | 24 |
| 16. திருக்கோணமலைப் பதிகம் ... ... ... ... | 28 |
| 17. 108 ஸ்ரீ லிங்க அர்ச்சனை ... ... ... ... | 31 |
| 18. சிவ பஞ்சாட்சர தோத்திரம் ... ... ... ... | 34 |
| 19. எண்ணங்கள் யாவும் ஈடேறும் துதிகள் ... ... | 35 |
| 20. லிங்காஷ்டகம் தமிழில் ... ... ... ... ... | 37 |
| 21. கௌரிக் காப்புப் பாடல் ... ... ... ... ... | 38 |
| 22. பிரதோஷம் ... ... ... ... ... ... ... | 41 |
| 23. பிரதோஷ பூசை தோத்திரம் ... ... ... ... | 43 |
| 24. பிரதோஷ தோத்திரம் ... ... ... ... ... ... | 44 |
| 25. நந்தீஸ்வரர் ... ... ... ... ... ... ... | 44 |
| 26. நந்திதேவர் துதி ... ... ... ... ... ... | 45 |
| 27. நலம் சேர்க்கும் நந்தீஸ்வரர் ... ... ... ... | 45 |

# முன்னுரை

சிவபெருமான் சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாகவும், பிறப்பும், இறப்பும் இல்லாத பரம்பொருளாகவும் இருப்பதனால் பரமசிவன் என்றும் அழைக்கின்றனர். இவர் தனது ஒரு பகுதியில் இருந்து அன்னை பாராசக்தியை உருவாக்கினார் எனவும், பின்னர் இருவரும் இணைந்து ஆனந்த தாண்டவமாடி அண்ட சராசரங்களை உருவாக்கினார்கள் என்றும் கருதப்படுகிறது.

அருவம், அருவுருவம், உருவம் என மூன்று வடிவங்களில் உள்ளார் என்றும், எதிலும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர், தூயவர், அழிவிலா இன்பம் உடையவர், பிறருக்கு ஆட்படாதவர் என்றெல்லாம் சித்தாந்தம் சிவனை வரையறுக்கிறது.

சிவனே சர்வேஸ்வரனாய் அகில உலகத்தையும் ஆட்சி செய்கிறான். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழில்களையும் இறைவன் செய்து மக்களைக் காப்பதாக வேதங்களும், புராணங்களும் கூறுகின்றன. இதனால் தான் உலகமே இயங்குகிறது.

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதியான சிவபெருமானுக்குரிய விரதங்களில் தலையாயது சிவராத்திரி விரதம். சைவமக்களால் கொண்டாடப்படும் சிறப்பு வாய்ந்த விரதமுமாகும். சிவராத்திரி விரதமிருப்பதனால் தெரியாமல் செய்த பாவங்களுடன், தெரிந்தே பாவங்கள் செய்திருந்தாலும் அவை எம்மை விட்டு நீங்கும் என்பது நம்பிக்கை.

தேங்காய், பழம், கற்பூரம் முதலியவற்றை அர்ச்சகரிடம் கொடுத்து விட்டால் நம் வழிபாடு முடிந்துவிட்டதென நினைத்துக் கொண்டு திரும்பி விடுகிறோம். இது மட்டும் வழிபாடு ஆகிவிடாது. வேதப் பாடல்களை பாடித் துதிப்பது மிகவும் அவசியம் என்கிறார் சேக்கிழார்.

தமிழ் வேதப்பாடல்கள் பாடுவதும் அல்லது மனம் ஒன்றி பதிகத்தை பாராயணம் செய்வதும் புனித சிவபழிபாடு ஆகும் என்கிறார் திருஞான சம்பந்தர். அன்றியும் உள்ளன்புடன் இப்படல்களை கேட்பதும் சிவவழி பாடு ஆகும்.

உணர்ந்து படியுங்கள். பாடல்களை பாராயணம் செய்யுங்கள். வாழ்வில் எல்லா வழமும், நலனும் பெறுங்கள்.

# சிவராத்திரி

சிவராத்திரி இந்துக்களால் கொண்டாடப்படும் சிவனுக்கு உகந்த நாளாகும். புராணங்களில் சிவராத்திரியைப் பற்றி பல்வேறு கதைகள் கூறப்பட்டாலும் யாவும் சிவனின் மகத்துவம் பற்றி எடுத்தியம் புவையே.

அடிமுடி காணமுடியாது தோல்வியுற்ற திருமால், பிரம்மன் ஆகிய இருவரும் தங்கள் செருக்கு அழிந்து தலைகுனிந்து நின்றவர்களுக்குச் சுடரொளியை நீக்கி சிவபெருமான் சுய உருவில் தோன்றிய இரவுதான் சிவராத்திரி ஆகும் என்றும் கூறுவர்.

உலகம் நீடித்து இருக்கும் காலம் கல்பம் என்று சொல்லப்படுகிறது. கல்ப முடிவில் பிரளயம் உண்டாகி உலகத்தை அழிக்கிறார் சிவபெருமான். அதனால் எங்கும் இருள்மயம் ஆகிறது. எஞ்சி இருப்பவர்கள் மகாதேவனும் மலைகளுமே ஆவார்கள். இந்த நிலையில் அனைத்தும் அழிவுற்ற அண்டத்தின் அவலநிலையைக் கண்ணுற்ற உமாதேவியார் இரவுப் பொழுதில் பரமேஸ்வரனை நினைத்துப் பூசை செய்தார். அப்போது சிவன் உலகங்களை மீண்டும் உண்டாக்கி, உயிர்களையும் படைத்தார். உமாதேவியார் சுவாமி! நான் தங்களை மனதில் தியானித்து போற்றிய காலம் "சிவராத்திரி" என்று பெயர் பெறவேண்டும் என்றும், அதனை சிவராத்திரி விரதம் என்று அனைவரும் கடைப்பிடிக்க வேண்டுவதுடன், அவ்விரதத்தைக் கடைப்பிடிப்பவர்கள் எல்லா நலன்களும் பெற்று முக்தியடைய வேண்டும் என்றும் பிரார்த்தித்தார். இறைவனும் அவ்வாறே அருள் புரிந்தார் என்றும் இன்னொரு கதை கூறுகிறது.

# சிவராத்திரி விரதம்

சிவனை நினைத்து மேற்கொள்ளப்படும் விரதம் சிவராத்திரி விரதமாகும். விழித்திருத்தல், பசித்திருத்தல், தனித்திருத்தல் என்ற மூன்றையும் சிவராத்திரி விரதத்தில் கடைப்பிடிப்பர்.

விழித்திருத்தல் என்பது அத்தினத்தில் இரவும், பகலும் தூங்காமல் சிவனையே நினைத்து கண் விழித்தலாகும்.

பசித்திருத்தல் என்பது எந்த உணவு வகைகளையோ, தண்ணீரோ அருந்தாமல் இறைவனை ஒரே நினைவாகச் சிந்தித்தல்.

தனித்திருத்தல் என்பது மனம் தனித்து அமைதி நிலையில் இறையுணர்வோடு இருத்தல் ஆகும்.

இவ்வாறு சிவராத்திரி விரதம் மேற்கொள்ளும் அனைவரும் விழித்திருந்து நான்கு ஜாம பூசையைக் கண்டுகளிக்கின்றனர்.

## சிவராத்திரி வகைகள்

சிவராத்திரி என்பது சிவனுக்கான இரவு. சிவராத்திரி விரதம் ஐந்து வகையாகக் கூறப்பட்டுள்ளதுடன். இந்நாட்களில் எப்படி விரதம் இருந்து வழிபட வேண்டும் என்றும் தரப்பட்டுள்ளது.

**நித்திய சிவராத்திரி:**

ஒவ்வொரு மாதமும் கிருஷ்ணபட்ச, சுக்லபட்ச சதுர்த்தசியில் வருவது நித்திய சிவராத்திரி. இதுபோல் மாதம் இரண்டாக வரும் நித்திய சிவராத்திரியை தொடர்ந்து 24 முறையும் அனுசரிக்க வேண்டும். அதாவது ஆண்டின் 12 மாதங்களிலும் வரும் தேய்பிறை சதுர்த்தசி 12, வளர்பிறை சதுர்த்தசி 12 என இருபத்து நான்கு சிவராத்திரிகளாகும்.

**மாத சிவராத்திரி:**

ஒவ்வொரு மாதமும் தேய்பிறை சதுர்த்தசி இரவு மாத சிவராத்திரி ஆகும். சிவனடியார் பலர் இந்த சிவராத்திரியையும் மாதம் தோறும் தவறாமல் கடைப்பித்து வருகின்றனர்.

**பட்ச சிவராத்திரி:**

தை மாதம் கிருஷ்ணபட்ச பிரதமை முதல் 13 நாட்கள் ஒரு நேரம் மட்டும் உணவு உண்டு 14ஆம் நாளான சதுர்த்தசியில் முழுநேர உபவாசம் இருப்பது பட்ச சிவராத்திரி.

**யோக சிவராத்திரி:**

சோமவார நாளன்று (திங்கட்கிழமை) பகல், இரவு முழுவதும் அமா வாசையாக பொருந்தி வந்தால் அது யோக சிவராத்திரி.

**மகா சிவராத்திரி:**

எல்லா வகையான சிவராத்திரிகளிலும் மேலானதும், வருஷம் ஒரு முறை மட்டுமே வருவதுமாகும். அனைத்து விதமான பாவங்களை யும் நீக்கி நல் வாழ்வைத் தருவதும், எல்லா நன்மைகளையும் தரக் கூடியதுமான வார்த்தைகளால் விபரிக்க முடியாத பெருமை பெற்றது தான் மகா சிவராத்திரி.

ஆண்டுதோறும் மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச (தேய்பிறை) சதுர்த்தசி திதியில் இரவில் அம்பிகை, சிவனை பூசித்து வணங்கிய நாளையே சிவராத்திரி விழாவாகக் கொண்டாடி வருகின்றனர்.

இந்நாளில் முறைப்படி விரதம் இருந்து சிவபெருமானை வழிபட்டால் சகல வளங்களையும் பெற்று வாழ்வில் மகிழ்ச்சியாக வாழ முடியும்.

புராணங்கள் போற்றும் மகா சிவராத்திரி தினத்தில் உடலையும் உள்ளத்தையும் பரிசுத்தமாக்கி விரதம் இருந்து முழுக்க முழுக்க சிவனாரிடம் மனம் இலயித்திருந்து இரவு கண் விழித்து சிவவழி பாடு செய்யவேண்டும்.

மாகா சிவராத்திரி என்னும் புண்ணியம் நிறைந்த நன்னாளில், இரவில் நான்கு ஜாமப் பூசைகள் நடைபெறும். அப்போது சிவலிங்க மானது குளிரக் குளிர வில்வங்களாலும், பூக்களாலும் அலங்கரிக் கப்படும்.

உணவு, நல்ல தூக்கம் என்பன மனிதர்களுக்கு மிக முக்கியமான இரண்டு விடயங்களாகும். இந்த இரண்டையும் விலக்கி சிவனுக் காக விரதமிருப்பதுதான் இந்த நாளின் நோக்கமாகும். உணவை யும், உறக்கத்தையும் விலக்கினால் புலன்கள் தானாகவே அடங் கும். அப்போது இறை உணர்வைப் பெறமுடியும். நினைத்த காரியம் நிறைவேறும்.

சிவராத்திரி அன்று சிவதரிசனத்தைக் காண புண்ணியம் செய்திருக்க வேண்டும். குறிப்பாக விரதம் மேற்கொண்டு சிவனாரைத் தரிசிப்பது இன்னும் கூடிய பலன்களை வழங்கும் என்கிறார்கள் ஆச்சாரியப் பெருமக்கள்.

மகா சிவராத்திரி விரதம் இருப்பவர்கள், அதிகாலையில் எழுந்து நித்தியக் கடன்களை முடித்து, நீராடி சிவாலயத்திற்குச் சென்று வழிபட வேண்டும். எதுவும் சாப்பிடாமல் சிவபுராணம் பாராயணம் செய்து விரதம் மேற்கொள்ள வேண்டும்.



## சகலமும் அரனே

பெரு நிலமாய் அண்டமாய் அண்டத்து அப்பால்
குரு நிலமாய் நின்ற கொள்கையான் ஈசன்
பெரு நிலமாய் நின்று தாங்கிய தாளோன்
அரு நிலையாய் நின்ற ஆதிப்பிரானே !

உள்ளத்துள் ஓம் என ஈசன் ஒருவனை
உள்ளத்துளே அங்கியாய ஒருவனை
உள்ளத்துளே நீதியாய ஒருவனை
உள்ளத்துளே உடல் ஆகாயம் ஆமே !

அண்டங்கள் ஓரேழும் அம்பொற் பதியாகப்
பண்டை ஆகாசங்கள் ஐந்தும் பதியாகத்
தெண்டினிற் சக்தி திருவம் பலமாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே !

அரன்நெறி ஆவது அறிந்தேனும் நானும்
சிர நெறி தேடி திரிந்த அந்நாளும்
உர நெறி உள்ள கடல் கடந்து ஏறும்
தர நெறி நின்ற தனிச்சுடர் தானே! - திருமந்திரம்

## சிவபூசையின் பலன்கள்

**சிவபூசைக்கு சந்தனம் அளிப்பதால் ...**

வைகாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் கங்கை முதலான மகா நதிகளில் நீராடி அடையும் பலன் கிட்டும்.

**சிவலிங்கம் பிரதிஷ்டை செய்வதால் ...**

பலகோடி வருடங்கள் உருத்திர பதவியில் வாழ்வார்கள்.

**சிவலிங்கத்திற்குப் பால் அபிசேகம் ஒருமுறை செய்வதால் ...**

மூவேளைகளிலும் நீராடி ஆயுள் காலம் முழுவதும் வார, மாத, வருட விரதங்கள் அனைத்தையும் தவறாது கடைப்பிடித்தவர்கள் அடையும் பலனுக்குச் சமன்.

**சிவனுக்கு ஒரு மலர் சாத்தினால் ...**

நூறு கோதானம் செய்வதால் கிட்டும் பலனுக்குச் சமமானது.

# சிவபுராணம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிச் சூழுந் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே — எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்
திருவாசகமெனும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி

நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவில்லாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று

சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து. 95

திருச்சிற்றம்பலம்

## திருக்கேதீச்சரப் பதிகம்

(ஏழாம் திருமுறை)

அருளியவர்: சுந்தரர் நாடு: மன்னார் தலம்: கேதீச்சரம்

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனைக் கவுள்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத்தானே.

சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான்திருக் கேதீச்சரத்தானே.

அங்கம்மொழி யன்னாரவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத்தானே.

கரியகறைக் கண்டன்நல கண்மேல்ஒரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயும் மாதோட்ட நன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்திருக் கேதீச்சரத்தானே.

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத்தானே.

வெய்யவினை யாயவ்வடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத்தானே.

ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத்தானே.

அட்டன்னழ காகவ்வரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்டநன் னகரில்
பட்டவ்வரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை யாள்வான்திருக் கேதீச்சரத்தானே.

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை ஆள்வான்திருக் கேதீச்சரத்தானே.

கரையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத்தானை
மறையார்புகழ் ஊரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே.

திருச்சிற்றம்பலம்



# திருக்கேதீச்சரப் பதிகம்

(இரண்டாம் திருமுறை)

அருளியவர்: திருஞானசம்பந்தர்

நாடு: மன்னார் தலம்: திருக்கேதீச்சரம்

திருச்சிற்றம்பலம்

விருது குன்றுமா மேருவில் நாணர வாஅனல் எரிஅம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே.

பாடல் வீணையர் பலபல சரிதையர் எருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்டநஞ் சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது விருங்கடற் கரையினில் எழில்திகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே.

பெண்ணார் பாகத்தர் பிறைதவழ் சடையினர் அறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவர் அகந்தொறும் இடுபிச்சைக்
குண்ண லாவதோர் இச்சையி னுழல்பவர் உயர்தரு மாதோட்டத்
தண்ணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க் கருவினை யடையாவே.

பொடிகொள் மேனியர் புலியத ளரையினர் விரிதரு கரந்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர் மறிகடல் மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம் பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல் மொய்த்தெழும் வினைபோமே.

நல்ல ராற்றவும் ஞானநன் குடையர் தம் மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர் மலிகடல் மாதோட்டத்
தெல்லை யில்புக ழெந்தைகே தீச்சரம் இராப்பகல் நினைந்தேத்தி
அல்லல் ஆசறுத் தரனடி யிணைதொழும் அன்பராம் அடியாரே.

பேழை வார்சடைப் பெருந்திரு மகள்தனைப் பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபா லருளிய பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழின் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீள் மார்பர்கே தீச்சரம் பிரியாரே.

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல் லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய்கே தீச்சர மதுதானே.

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந் தெடுத்தவன் முடிதிண்தோள்
தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்செய்த தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும் பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடு அடியவ ரிறைஞ்சுகே தீச்சரத் துள்ளாரே.

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும் புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் அடியினை காண்கிலா வித்தக மென்னாகும்
மாவும் பூகமுங் கதலியும் நெருங்குமா தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத் திருந்தஎம் பெருமானே.

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர் புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய ஏழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட வுரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே தீச்சரம் அடைமின்னே.

மாடெ லாமண முரசெனக் கடலின தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை யண்ணல் கேதீச்சரத் தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொல் நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின்ப த்தர்கள் பரகதி பெறலாமே.

திருச்சிற்றம்பலம்



# திருஞானசம்பந்தர் தேவாரம்

(முதலாம் திருமுறை)

அருளியவர்: திருஞானசம்பந்தர்  தலம்: திருவண்ணாமலை

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைமுழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.

தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுகன்மிசை சிறுநுண்துளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழில் அண்ணாமலை அண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினை யிலரே.

பீலிம்மயில் பெடையோடுறை பொழில் சூழ்கழை முத்தம்
சூலிம்மணி தரைமேல்நிறை சொரியும்விரி சாரல்
ஆலிம்மழை தவழும்பொழில் அண்ணாமலை அண்ணல்
காலன்வலி தொலைசேவடி தொழுவாரன புகழே.

உதிரும்மயி ரிடுவெண்டலை கலனாவுல கெல்லாம்
எதிரும்பலி யுணலாகவும் எருதேறுவ தல்லால்
முதிருஞ்சடை இளவெண்பிறை முடிமேல்கொள அடிமேல்
அதிருங்கழல் அடிகட்கிடம் அண்ணாமலை யதுவே.

மரவஞ்சிலை தரளம்மிகு மணியுந்துவெள் ளருவி
அரவஞ்செய முரவம்படும் அண்ணாமலை அண்ணல்
உரவஞ்சடை யுலவும்புனல் உடனாவதும் ஓரார்
குரவங்கமழ் நறுமென்குழல் உமைபுல்குதல் குணமே.

பெருகும்புனல் அண்ணாமலை பிறைசேர்கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி அணிவாரது பருகிக்
கருகும்மிட றுடையார்கமழ் சடையார்கழல் பரவி
உருகும்மனம் உடையார்தமக் குறுநோயடை யாவே.

கரிகாலன குடர்கொள்வன கழுதாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலை யுதையுண்டவை யுருள

எரியாடிய இறைவர்க்கிடம் இனவண்டிசை முரல
அரியாடிய கண்ணாளொடும் அண்ணாமலை யதுவே.


ஒளிறூபுலி யதளாடையன் உமையஞ்சுதல் பொருட்டால்
பிளிறூகுரல் மதவாரண வதனம்பிடித் துரித்து
வெளிறூபட விளையாடிய விகிர்தன்னிரா வணனை
அளறூபட அடர்த்தானிடம் அண்ணாமலை யதுவே.

விளவார்கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை கேடில்புக ழோனும்
அளவாவணம் அழலாகிய அண்ணாமலை அண்ணல்
தளராமுலை முறுவல்லுமை தலைவன்னடி சரணே.

வேர்வந்துற மாசூர்தர வெயில்நின்றுழல் வாரும்
மார்பம்புதை மலிசீவர மறையாவரு வாரும்
ஆரம்பர்தம் உரைகொள்ளன்மின் அண்ணாமலை அண்ணல்
கூர்வெண்மழுப் படையான் நல்ல கழல்சேர்வது குணமே.

வெம்புந்திய கதிரோன்ஒளி விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவன் அண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுள் ஞான
சம்பந்தன் தமிழ்வல்லவர் அடிபேணுதல் தவமே.

திருச்சிற்றம்பலம்



# ஓம் நமச்சிவாய நமஹ

சிவவாக்கியர் அருளிய சிவவாக்கியம் ஒன்றே குலம் ஒருவனே தேவன்! உள்ளமே கோயில் என்னும் கொள்கையை உணர்த்துகிறார்.

ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம்
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம்
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம்
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம்
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம்
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம்

ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த ஜோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்து போய்
வாடி வாடி வாடி வாடி மாண்டு போன மாந்தர்கள்
கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே.
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்ததில்லையே
என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லரோ
என்னிலே இருந்து இருந்துயான் உணர்ந்து கொண்டேனே.
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

நானதேது நீயதேது நடுவில் நின்றதேதடா
கோனதேது குருவதேது கூறிடும் குலாமரே
ஆவதேது அழிவதேது அப்புறத்தில் அப்புறம்
ஈனதேது ராம ராம ராமா என்ற நாமமே.
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

அஞ்செழுத்திலே பிறந்து அஞ்செழுத்திலே வளர்ந்து
அஞ்செழுத்தை ஓதுகின்ற பஞ்சபூத பாவிகள்
அஞ்செழுத்திலோர் எழுத்து அறிந்துகூற வல்லரேல்
அஞ்சல் அஞ்சல் எனறுநாதன் அம்பலத்தில் ஆடுமே.
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

இடது கண்கள் சந்திரன், வலது கண்கள் சூரியன்
இடக்கை சங்கு சக்கரம் வலக்கை சூல மான்மழு
எடுத்தபாத நீள்முடி எண்திசைக்கும் அப்புறம்
உடல்கலந்து நின்றமாயம் யாவர்காண வல்லரோ.
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

உருவுமல்ல வெளியுமல்ல ஒன்றைமேவி நின்றதல்ல
மருவுமல்ல காதமல்ல மற்றதல்ல அற்றதல்ல
பெரியதல்ல சிறியதல்ல போகுமாவி தானுமல்ல
அரியதாக நின்றநேர்மை யாவர்காண வல்லரோ.
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

மண்கலங் கவிழ்ந்தபோது வைத்துவைத்து அடுக்குவார்
வெண்கலங் கவிழ்ந்தபோது வேணுமென்று பேணுவார்
நண்கலங் கவிழ்ந்தபோது நாறுமென்று போடுவார்
எண்கலந்து நின்றமாயம் என்ன மாய மீசனே.
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

ஆனவஞ் செழுத்துளே அண்டமும் அகண்டமும்
ஆனவஞ் செழுத்துளே ஆதியான மூவரும்
ஆனவஞ் செழுத்துளே அகாரமும் மகாரமும்
ஆனவஞ் செழுத்துளே அடங்கலாவ லுற்றதே.
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

நினைப்பதொன்று கண்டிலேன் நீயலாது வேறில்லை
நினைப்புமாய் மறப்புமாய் நின்ற மாய்கை மாய்கையை
அனைத்துமாய் அகண்டமாய் அனாதிமுன் அனாதியாய்
எனக்குள்நீ உனக்குள்நான் இருக்குமாறு எங்ஙனே.
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம்....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம்....

பண்டுநான் பறித்தெறிந்த பன்மலர்கள் எத்தனை?
பாரிலே செபித்துவிட்ட மந்திரங்கள் எத்தனை?
மிண்டராய்த் திரிந்த போது இறைத்த நீர்கள் எத்தனை?
மீளவும் சிவாலயங்கள் சூழ வந்தது எத்தனை?
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

அம்பலத்தை அம்பு கொண்டு அசங்கென்றால் அசங்குமோ?
கம்பமற்ற பாற்கடல் கலங்கென்றால் கலங்குமோ?
இன்பமற்ற யோகியை இருளும் வந்து அணுகுமோ?
செம்பொன் அம்பலத்துளே தெளிந்ததே சிவாயமே.
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

மூன்று மண்டலத்திலும் முட்டி நின்ற தூணிலும்
நான்ற பாம்பின் வாயினும் நவின்றெழுத்த அட்சரம்
ஈன்ற தாயும் அப்பரும் எடுத்துரைத்த மந்திரம்
தோன்றுமோர் எழுத்துளே சொல்ல வெங்குதிலையே.
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

நமச்சிவாய அஞ்செழுத்தும் நிற்குமே நிலைகளும்
நமச்சிவாய மஞ்சுதஞ்சும் புராணமான மாய்கையை
நமச்சிவாய அஞ்செழுத்தும் நம்முள்ளே இருக்கவே
நமச்சிவாய உண்மையை நன்குரைசெய் நாதனே.
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

இல்லை இல்லை என்று இயம்புகின்ற ஏழைகாள்
இல்லை என்று நின்ற ஒன்றை இல்லை என்னலாகுமோ
இல்லையல்ல என்றுமல்ல இரண்டும் ஒன்றி நின்றதை
எல்லைகண்டு கொண்டார் இனிப்பிறப்பதிங் கில்லையே.
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

கார கார கார கார காவல் ஊழி காவலன்
போர போர போர போர போரில் நின்ற புண்ணியன்
மார மார மார மார மரங்கள் எழும் எய்தசீ
ராமராம ராமராம ராம நாமம் எனும் நாமமே
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

விண்ணிலுள்ள தேவர்கள் அறியொணாத மெய்ப்பொருள்
கண்ணில் ஆணியாகவே கலந்து நின்ற எம்பிரான்
மண்ணெலாம் பிறப்பறுத்து மலரடிகள் வைத்தபின்
அண்ணலாரும் எம்முனே அமர்ந்து வாழ்வது உண்மையே.
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

அகாரமான தம்பலம் அனாதியான தம்பலம்
உகாரமான தம்பலம் உண்மையான தம்பலம்
மகாரமான தம்பலம் வடிவமான தம்பலம்
சிகாரமான தம்பலம் தெளிந்ததே சிவாயமே.
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

உண்மையான மந்திரம் ஒளியிலே இருந்திடும்
தன்மையான மந்திரம் சமைந்த ரூபமாகியே
வெண்மையான மந்திரம் விளைந்து நீறதானதே
உண்மையான மந்திரம் தோன்றுமே சிவாயமே
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

ஓம் நமச்சிவாயமே உணர்ந்து மெய் உணர்ந்தபின்
ஓம் நமச்சிவாயமே உணர்ந்து மெய் தெளிந்தபின்
ஓம் நமச்சிவாயமே உணர்ந்து மெய் உணர்ந்தபின்
ஓம் நமச்சிவாயமே உட்கலந்து நிற்குமே.
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....
ஓம் நமச்சிவாய ஓம், ஓம் நமச்சிவாய ஓம் ....

# நமச்சிவாயத் திருப்பதிகம்

(ஏழாம் திருமுறை)

சுந்தரர் திருவைந்தெழுத்தை அமைத்துப் பாடியருளியது. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் சொல்லும்நா நமச்சிவாயவே என்று அருளியதால் நமச்சிவாயத் திருப்பதிகம் என்ற பெயர் வழங்கலாயிற்று. இப் பதிகத்தை சொன்னாலே துன்பங்கள் நீங்கும்.

தலம்: திருப்பாண்டிக்கொடுமுடி நாடு: கொங்குநாடு

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனி னிப்பிற வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லும் நாநமச்சி வாயவே. 1

இட்ட னுன்னடி ஏத்து வார்இகழ்ந் திட்ட நாள்மறந் திட்டநாள்
கெட்ட நாளிவை என்ற லார்கரு தேன்கி ளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்ட டிதொழு தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும் நாநமச்சி வாயவே. 2

ஓவு நாள்உணர் வழியும்நாள் உயிர்போகும் நாள்உயர் பாடைமேல்
காவு நாளிவை என்றலாற்கரு தேன்கி ளர்புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்தி ழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும் நாநமச்சி வாயவே. 3

எல்லை யில்புகழ் எம்பி ரானெந்தை தம்பி ரானென்பொன் மாமணி
கல்லை யுந்தி வளம் பொழிந்திழி காவிரி யதன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்ல வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும் நாநமச்சி வாயவே. 4

அஞ்சி னார்க்கரண் ஆதி என்றடி யேனும் நான்மிக அஞ்சினேன்
அஞ்ச லென்றடித் தொண்ட னேற்கருள் நல்கி னாய்க்கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந் தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினுஞ் சொல்லும் நாநமச்சி வாயவே. 5

ஏடு வானிளந் திங்கள் சூடினை என்பின் கொல்புலித் தோலின்மேல்
ஆடு பாம்ப தரைக்க சைத்த அழக னேயந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்தி ழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடி
சேட னேஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும் நாநமச்சி வாயவே. 6

விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந் தேன்வி னைகளும் விண்டனன்
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெ ழில்பெற நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந் தாடு பாண்டிக் கொடுமுடி
விரும்ப னேஉனை நான் மறக்கினுஞ் சொல்லும் நாநமச்சி வாயவே. 7

செம்பொ னேர்சடை யாய்தி ரிபுரந் தீயெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாக மமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயில் ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்பே னேஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும் நாநமச்சி வாயவே. 8

சார ணந்தந்தை எம்பி ரானெந்தை தம்பி ரானென்பொன் மாமணியென்று
பேரெ ணாயிர கோடி தேவர் பிதற்றி நின்று பிரிகிலார்
நார ணன்பிர மன்தொ ழுங்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
கார ணாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும் நாநமச்சி வாயவே. 9

கோணிய பிறை சூடி யைக்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப் பிஞ்ஞகப் பித்த னைப் பிறப் பில்லியைப்
பாணு லாவரி வண்ட றைகொன்றைத் தார னைப்படப் பாம்பரை
நாண னைத்தொண்டன் ஊரன் சொல்லிவை சொல்லு-
வார்க்கில்லை துன்பமே. 10

திருச்சிற்றம்பலம்

## தீராப்பிணிகளை தீர்க்கும் பதிகம்

(முதலாம் திருமுறை)

திருநீலகண்டனை வேண்டி திருஞானசம்பந்தர் பாடிய இப்பதிகத்தை பாராயணம் செய்யின் நோயின் கடுமை குறைந்து, பிணிநீங்கும்.

அருளியவர்:திருஞானசம்பந்தர் தலம்: பொது

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழற் போற்றுதும் நாமடியோஞ்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 1

காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங் களிமனத்தால்
ஏவினை யாலெயின் மூன்றெரித் தீரென் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 2

முலைத்தடம் மூழ்கிய போகங் களும்மற் றெவையுமெல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமுந் தண்டும் மழுவும் இவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 3

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீருங் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 4

மற்றினை யில்லா மலைதிரண் டன்னதிண் டோளுடையீர்
கிற்றெமை யாட்கொண்டு கேளா தொழிவதுந் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடி யேயடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 5

மறக்கு மனத்தினை மாற்றியெம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக் கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை யேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 6

*(7வது செய்யுள் சிதைந்து போயுள்ளதாகக் கருதப்படுகிறது.)*

கருவைக் கழித்திட்டு வாழக்கை கடிந்துங் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை யேத்துதும் நாமடி யோம்
செருவில் அரக்கனை சீரி லடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 8

நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்றமுடைய அடியும் முடியுந் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குதும் நாமடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 9

சாக்கியப் பட்டுஞ் சமணுரு வாகி யுடையொழிந்தும்
பாக்கிய மின்றி யிருதலைப் போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை யீரடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெறாதிரு நீலகண்டம். 10

பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகில் இமையவர் கோனடிக்கண்
திறம்பயில் ஞானசம் பந்தன் செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்

# பல்பெயப்பத்து தேவாரத் திருப்பதிகம்

(முதலாம் திருமுறை)

இப்பதிகத்தை ஓதினால் தேவாரம் முழுவதும் ஓதிய பயன் பெறுவர். திருஞானசம்பந்தர் தனது தந்தையாரான சிவபாதவிருதையருக்காக அருளிய பதிகம். தந்தையின் உடல் நலம், மனநலம் சீர்பெறுவதற்கும், தனக்குக் கிடைக்க வேண்டிய வாய்ப்புக்கள் நழுவாமல் இருப்பதற்கும், புண்ணிய பயன்களைப் பெறுவதற்கும் ஓதவேண்டிய பதிகம்.

தலம்: சீர்காழி-பல்பெயரப்பத்து சிறப்பு: திருவெழுகூற்றிருக்கை

திருச்சிற்றம்பலம்

ஓர் உரு ஆயினை மான் ஆங்காரத்து
ஈரியல் பாய் ஒரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத் தளித் தழிப்ப மும்மூர்த்திகள் அயினை
இருவரோடு ஒருவனாகி நின்றனை
ஓர் ஆல்நீழல் ஒண்கனல் இரண்டும்
முப்பொழுதேத்திய நால்வர்க்குஒளிநெறி
காட்டினை நாட்டம் மூன்றாகக் கோட்டினை
இருநதி அரவமோடு ஒருமதி சூடினை
ஒருதாள் ஈரயில் மூவிலைச் சூலம்

நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட்டு ஒருகரி ஈடழித்து உரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத்தோடு நானிலம் அஞ்சக்

கொன்று தலத்துற அவுணரை அறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக்கரணம்
முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ஒருங்கிய மனத்தோடு
இருபிறப்பு ஓர்ந்து முப்பொழுது குறைமுடித்து

நான்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்து ஆறங்க முதலெழுத்தோதி
வரன்முறை பயின்றெழு வான்தனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை

இகலியமைந்துணர் புகலி அமர்ந்தனை
பொங்கு நாற்கடல் சூழ் வெங்குரு விளங்கினை
பாணி மூவுலகும் புதைய மேல்மிதந்த
தோணி புரத்து உறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை

வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை எடுத்த இருதிறலரக்கன்
விறல் கெடுத்தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை

ஐயுறும் அமணரும் அறுவகைத்தேரும்
ஊழியும் உணராக் காழி யமர்ந்தனை
எச்சன் எழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறுபதமும் ஐந்தமர் கல்வியும்
மறை முதல் நான்கும்

மூன்று காலமும் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்

அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லை நீள்நிலத்தே.

திருச்சிற்றம்பலம்

சிவனுக்குரிய

## போற்றித் திருஅகவல்

(எட்டாம் திருமுறை)

மாணிக்கவாச சுவாமிகள் தில்லையில் அருளிய திருவாசகம்.

ஆடக மதுரை அரசே போற்றி
கூடல் இலங்கு குருமணி போற்றி
தென் தில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்று எனக்கு ஆரமுது ஆனாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின் ஆர் உருவ விகிர்தா போற்றி
கல் நார் உரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆ ஆ என்தனக்கு அருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈசா போற்றி இறைவா போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதி சேர் செஞ்சடை நம்மா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி

கடையேன் அடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க்கு அரிய மருந்தே போற்றி
ஏனோர்க்கு எளிய இறைவா போற்றி
மூவேழ்ச் சுற்றமும் முரண் உறு நரகு இடை
ஆழாமே அருள் அரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றி என் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர்வு இறந்த ஒருவ போற்றி
விரிகடல் உலகின் விளைவே போற்றி
அருமையில் எளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையும் ஒருவ னாக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
முழுவதும் பிறந்த முதல்வா போற்றி
மான்நேர் நோக்கி மணாளா போற்றி
வான் அகத்து அமரர் தாயே போற்றி
பார்இடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவர் உள்ளத்து அமுதே போற்றி
கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி

நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி
இடைமருது உறையும் எந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீர் ஆர் திருவையாறா போற்றி
அண்ணாமலை எம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி
ஏகம்பத்து உறை எந்தாய் போற்றி
பாகம் பெண் உரு ஆனாய் போற்றி
பாராய்த் துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்று ஓர் பற்று இங்கு அறியேன் போற்றி
குற்றாலத்து எம் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலை எம் எந்தாய் போற்றி
பாங்கு ஆர் பழனத்து அழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க்கு அருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழ் இருமூவர்க்கு
அத்திக்கு அருளிய அரசே போற்றி
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்கும் இறைவா போற்றி
ஏனக் குருளைக்கு அருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி
களம் கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சேல் என்று இங்கு அருளாய் போற்றி
நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி

பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சு ஏர் அடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன்அடியேன் போற்றி
இலங்கு சுடர் எம் ஈசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலை நாடு உடைய மன்னே போற்றி
கலை ஆர் அரிகேசரியாய் போற்றி
திருக்கழுக் குன்றில் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத்து அரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி
தெரிவு அரிது ஆகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆள் ஆனவர்களுக்கு அன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேர் ஆயிரம் உடைப் பெம்மான் போற்றி.



# திருக்கோணமலைப் பதிகம்

(மூன்றாம் திருமுறை)

அருளியவர்: திருஞானசம்பந்தர் தலம்: திருக்கோணமலை

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே 1

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே 2

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தவர் மதின்மேற்
தனித்தபே ருருவ விழித்தழல் நாந்
தாங்கிய மேருலெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே 3

பழித்திளங் கங்கை சடைமுடி வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்

தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடற் றளரஞ்
செம்பொனும் இப்பியும் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே 4

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுணையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே 5

பரிந்துநன் மனத்தால் வழிபடம் மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே. 6

இப்பதிகத்தின் 7ஆம் செய்யுள் சிதைந்து போயிற்று

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வுங்
கொடுத்தவர் விரும்பும் பொரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே. 8

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம்ஒள் ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்குங்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே. 9

நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒருபால்
மெல்லிய லொடும்உட னாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே. 10

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலை யீரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. 11

திருச்சிற்றம்பலம்



# 108 ஸ்ரீ லிங்க அர்ச்சனை

இராவணசம்கிதை என்ற நூலில் இராவணனால் சொல்லி பூசிக்கப்பட்ட 108 லிங்க நாமங்கள்.

1. ஓம் ஏகலிங்காய நம
2. ஓம் கோடிலிங்காய நம
3. ஓம் சர்வலிங்காய நம
4. ஓம் ஐஸ்வர்ய லிங்காய நம
5. ஓம் ஓங்கார லிங்காய நம
6. ஓம் வித்யா லிங்காய நம
7. ஓம் ஆகாச லிங்காய நம
8. ஓம் வாயுர் லிங்காய நம
9. ஓம் அக்னி லிங்காய நம
10. ஓம் கங்கா லிங்காய நம
11. ஓம் ப்ருத்வீ லிங்காய நம
12. ஓம் வேத லிங்காய நம
13. ஓம் ப்ராண லிங்காய நம
14. ஓம் ஆத்ம லிங்காய நம
15. ஓம் குரு லிங்காய நம
16. ஓம் வைத்ய லிங்காய நம
17. ஓம் அத்வைத லிங்காய நம
18. ஓம் அனந்த லிங்காய நம
19. ஓம் சாத்வீக லிங்காய நம
20. ஓம் சமத்வ லிங்காய நம
21. ஓம் சக்ர லிங்காய நம
22. ஓம் சௌபாக்ய லிங்காய நம
23. ஓம் சௌந்தர்ய லிங்காய நம
24. ஓம் சௌகர்ய லிங்காய நம
25. ஓம் சந்தான லிங்காய நம
26. ஓம் ஞான லிங்காய நம
27. ஓம் முக்த லிங்காய நம
28. ஓம் ரிக்ஷீஸ்வர லிங்காய நம
29. ஓம் வேதாந்த லிங்காய நம
30. ஓம் பால்ய லிங்காய நம

31. ஓம் பவித்ர லிங்காய நம
32. ஓம் சப்த லிங்காய நம
33. ஓம் ஜோதிர் லிங்காய நம
34. ஓம் சகுண லிங்காய நம
35. ஓம் கருணா லிங்காய நம
36. ஓம் நாத விந்து லிங்காய நம
37. ஓம் கலாதீத லிங்காய நம
38. ஓம் பஞ்சபூத லிங்காய நம
39. ஓம் நிஸ்த்ரைகுண்ய லிங்காய நம
40. ஓம் பாகூஷ்ய லிங்காய நம
41. ஓம் ஸர்வதேவதா லிங்காய நம
42. ஓம் சப்தரிகூஷி லிங்காய நம
43. ஓம் ஊர்த்வமுக லிங்காய நம
44. ஓம் அதோமுக லிங்காய நம
45. ஓம் ருத்ர லிங்காய நம
46. ஓம் ஆதிசிவ லிங்காய நம
47. ஓம் சுபரூப லிங்காய நம
48. ஓம் அதிரூப லிங்காய நம
49. ஓம் அத்விதீய லிங்காய நம
50. ஓம் ஆறாதார லிங்காய நம
51. ஓம் மகாத்மிய லிங்காய நம
52. ஓம் மகா லிங்காய நம
53. ஓம் மனோ லிங்காய நம
54. ஓம் மந்திர லிங்காய நம
55. ஓம் மகோன்னத லிங்காய நம
56. ஓம் மணிர்வாஸ்ய லிங்காய நம
57. ஓம் மதரூப லிங்காய நம
58. ஓம் மதிசூதன லிங்காய நம
59. ஓம் பர்வத லிங்காய நம
60. ஓம் பார்வதீ லிங்காய நம
61. ஓம் பஞ்சேந்திரிய லிங்காய நம
62. ஓம் சத்ய லிங்காய நம
63. ஓம் ஸ்படிக லிங்காய நம
64. ஓம் நிஸ்பத லிங்காய நம
65. ஓம் பிரபஞ்ச லிங்காய நம
66. ஓம் அதிர்கூஷ்ட லிங்காய நம

67. ஓம் ஆரோக்ய லிங்காய நம
68. ஓம் கால பிரம்ம லிங்காய நம
69. ஓம் காலா அபிரிஜித லிங்காய நம
70. ஓம் தேஜோ லிங்காய நம
71. ஓம் விகாஸ லிங்காய நம
72. ஓம் விராட லிங்காய நம
73. ஓம் விஸ்வேஸ்வர லிங்காய நம
74. ஓம் சர்வேஸ்வர லிங்காய நம
75. ஓம் சகஸ்ர லிங்காய நம
76. ஓம் சகஜ லிங்காய நம
77. ஓம் சகாபத லிங்காய நம
78. ஓம் சர்வ சாஸ்திர லிங்காய நம
79. ஓம் சூரிய லிங்காய நம
80. ஓம் சந்திர லிங்காய நம
81. ஓம் சாந்த லிங்காய நம
82. ஓம் சிவ லிங்காய நம
83. ஓம் தவ லிங்காய நம
84. ஓம் தன லிங்காய நம
85. ஓம் தர்ம லிங்காய நம
86. ஓம் சதாசிவ லிங்காய நம
87. ஓம் சாம்பசிவ லிங்காய நம
88. ஓம் திரிநேத்திர லிங்காய நம
89. ஓம் அந்தர்யாமி லிங்காய நம
90. ஓம் விவிதரூப லிங்காய நம
91. ஓம் விஸ்வரூப லிங்காய நம
92. ஓம் பிரணவ லிங்காய நம
93. ஓம் பிரம்ம லிங்காய நம
94. ஓம் யம லிங்காய நம
95. ஓம் காசி லிங்காய நம
96. ஓம் ராமேஸ்வர லிங்காய நம
97. ஓம் சர்வஸ்தல லிங்காய நம
98. ஓம் சத்ரு நாசன லிங்காய நம
99. ஓம் கனக லிங்காய நம
100. ஓம் யாக லிங்காய நம
101. ஓம் நாத லிங்காய நம
102. ஓம் சங்கர லிங்காய நம
103. ஓம் வேதபுரீஸ்வர லிங்காய நம

104. ஓம் யோக லிங்காய நம
105. ஓம் அஷ்டமாசித்தி அனுக்ரக லிங்காய நம
106. ஓம் அர்விந்தாஸன லிங்காய நம
107. ஓம் நவரத்ன லிங்காய நம
108. ஓம் ரிக்ஷபாருட லிங்காய நம

ஓம் ஸர்வ மாங்கள லிங்காய நம

## சிவ பஞ்சாட்சர தோத்திரம்

இப்பஞ்சாட்சர தோத்திரத்தை அதிகாலையில் படித்தால் தெய்வ சக்தி கிட்டும். கல்வி, ஞானம், மேன்மை அதிகரிக்கும். சக்தி வாய்ந்த இந்த மந்திரத்தால் சிவனே கண்முன் தோன்றுவார் என்பது ஐதீகம்.

அரவினை அணியாய்க் கொண்டான் அரனெனும் மகேசுவரன்தான்
வீபூதியை தரித்த மேனி விளங்குவோன் நித்தன் சுத்தம்
அபேதமும் பேதம் ஆன அரிய திகம்பரனை யந்த
நகாரமாய் உருக்கொள் வோனை நலமுறத் துதிக்கின்றேன்.

கங்கையிற் கலந்த சாந்தம் களபமாய்ப் பூசுவார் காண்
நந்தியுள் ளிட்டோரான நற்கணநாதன் ஆனான்
மந்தாரை மலரின் பூஜை மல்கிடும் மகேச னான
மகாரமாய் உருக்கொள் வோனை மனங்கொளத் துதிக்கின்றேனே.

தக்கனின் யாகம் தன்னை தகர்த்து தாட்சாயினியின்
மிக்கதோர் வதன காந்தி அவித்தவன் நில கண்டன்
தொக்கமா விடைக் கொடிகொள் தூயனை அரனை அந்தச்
சிகாரமாய் உருக்கொள் வோனைச் சிவனையான் துதிக்கின்றேனே.

வசிட்ட கதத்திய ரோடு வல்லவர் கௌதமர் போல்
தவத்தினில் சிறந்தோர் தேவர் தாமுறை தொழுது வாழ்த்தும்
சந்திர சூரியாக் னியாமெனும் சார்முக் கண்ணன் தன்னை
வகாரமாய் உருக்கொள் வோனை வள்ளலைத் துதிக்கின்றேனே.

யட்ச சொரூபம் கொண்ட யாகசெஞ் சடையைக் கொண்ட
கட்க பிணாக ஹஸ்தக் கடவுளை அழிவற்றோரை
தொக்க மங்களங்கள் யாவும் தொடர்திகம் ப்ரராம் துய்ய
யகாரமாய் உருக்கொள் வோனை யாண்டுமே துதிக்கின்றேனே.

# எண்ணங்கள் யாவும் ஈடேறும் துதிகள்

(ஏழாம் திருமுறை)

ஆவடுதுறையில் வீற்றிருக்கும் சிவனைத் தரிசித்து, அவரது அற்புதங்களை போற்றி சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்றது.

தலம்: ஆவடுதுறை நாடு: சோழநாடு காவிரித் தென்கரை

திருச்சிற்றம்பலம்

மறைய வனொரு மாணிவந் தடைய
வாரமாய் அவன் ஆருயிர் நிறுத்தக்
கறைகொள் வேலுடைக் காலனைக் காலாற்
கடந்த காரணங் கண்டுகண் டடியேன்
இறைவன் எம்பெருமான் என்றெப்போதும்
ஏத்தி ஏத்திநின் றஞ்சலி செய்துன்
அறைகொள் சேவடிக் கன்பொடும் அடைந்தேன்
ஆவடுதுறை ஆதி எம்மானே. 1

தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி
சித்தரப் பந்தர் சிக்கென இயற்றச்
சுருண்ட செஞ்சடையாய்அது தன்னைச்
சோழன் ஆக்கிய தொடர்ச்சிகண் டடியேன்
புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம்
போற்றி போற்றி என்றன்போடு புலம்பி
அருண்டென் மேல்வினைக்கு அஞ்சி வந்தடைந்தேன்
ஆவடுதுறை ஆதி எம்மானே. 2

திகழும் மாலவன் ஆயிர மலரால்
ஏத்து வான் ஒரு நீண்மலர் குறையப்
புகழினால் அவன் கண்இடந் திடலும்
புரிந்து சக்கரங் கொடுத்தல்கண் டடியேன்
திகழும் நின்திருப் பாதங்கள் பரவித்
தேவ தேவநின் திறம்பல பிதற்றி
அகழும் வல்வினைக்கு அஞ்சிவந்தடைந்தேன்
ஆவடுதுறை ஆதி எம்மானே. 3

வீரத்தால் ஒரு வேடுவனாகி
விசைத்தோர் கேழலைத் துரந்துசென் றனைந்து
போரைத் தான்விச யன்றனக் கன்பாய்ப்
புரிந்து வான்படை கொடுத்தல்கண் டடியேன்
வாரத்தால் உன் நாமங்கள் பரவி
வழிபட்டு உன்திறமே நினைந்துருகி
ஆர்வத் தோடும் வந்தடியினை அடைந்தேன்
ஆவடுதுறை ஆதி எம்மானே. 4

ஒக்க முப்பரம் ஓங்கெரி தூவ
உன்னை உன்னிய மூவர்நின் சரணம்
புக்கு மற்றவர் பொன்னுல காளப்
புகழினால் அருள் ஈந்தமை அறிந்து
மிக்க நின்கழலே தொழு தரற்றி
வேதியா ஆதி மூர்த்திநின் அரையில்
அக்கணிந்த எம்மான்உனை அடைந்தேன்
ஆவடுதுறை ஆதி எம்மானே. 5

திருச்சிற்றம்பலம்

*(மொத்தம் 10 செய்யுள்களில் ஆறு தொடக்கம் பத்தாம் செய்யுள் வரை சிதைந்து போயுள்ளதாக கருதப்படுகிறது.)*



## லிங்காஷ்டகம் தமிழில்

மந்திர வலிமை வாய்ந்த லிங்காஷ்டகம் என்னும் இச்சுலோக த்தை கூறினால், உறவினர்களின் நெருக்கத்தைப் பெறலாம், எதிரிகளின் எதிர்ப்புக்களை முறியடிக்கலாம். கூடவே நற் பலன் களையும் பெறலாம்.

நான்முகன் நாராயணன் போற்றிடும் லிங்கம்
நிர்மலமாய் குறை ஏதிலா லிங்கம்
பிறவிப் பிணிதனைப் போக்கிடும் லிங்கம்
நாளும் வணங்கும் சதாசிவ லிங்கம்

தேவரும் முனிவரும் வணங்கிடும் லிங்கம்
காமனை எரித்த கருணாகர லிங்கம்
இராவணன் உள்ளம் உறைந்திடும் லிங்கம்
நாளும் வணங்கும் சதாசிவ லிங்கம்

வாசம் அனைத்தையும் பூசிடும் லிங்கம்
வளர் அறிவாகிய காரண லிங்கம்
சித்தரும் தேவரும் பூசிக்கும் லிங்கம்
நாளும் வணங்கும் சதாசிவ லிங்கம்

பொன்னார் மேனியாய் ஒளிர்ந்திடும் லிங்கம்
தன்னுடல் நாகம் தழுவிய லிங்கம்
தட்சனின் யாகம் தடுத்திட்ட லிங்கம்
நாளும் வணங்கும் சதாசிவ லிங்கம்

குங்குமம் சந்தணம் பூசிய லிங்கம்
பங்கஜ மாலையைச் சூடிய லிங்கம்
முந்திய வினைகளை போக்கிடும் லிங்கம்
நாளும் வணங்கும் சதாசிவ லிங்கம்

தேவர் கணங்களின் அர்ச்சன லிங்கம்
தேடிடும் பக்தியில் ஊறிடும் லிங்கம்
சூரியன் கோடி சுடர்விடும் லிங்கம்
நாளும் வணங்கும் சதாசிவ லிங்கம்

எட்டு தளத்தினில் எழுந்திடும் லிங்கம்
எல்லாம் ஆகிய காரண லிங்கம்
எட்டு தரித்திரம் நீக்கிடும் லிங்கம்
நாளும் வணங்கும் சதாசிவ லிங்கம்

தேவரின் உருவின் பூசைக்கோர் லிங்கம்
தேவ வணமலரை ஏற்றிடும் லிங்கம்
பரம நாதனாய் பரவிடும் லிங்கம்
அனுதினம் வணங்கும் சதாசிவ லிங்கம்

எடடென ஆகிய இச்சிவன் துதியை
இட்டமுடன் சொல்வோர் கஷ்டங்கள் தீரும்
விருப்புடன் விடையவன் காட்சி கிட்டும்
அருள் பெற்று அவனுடன் அருகினில் இருப்பர்.

## கௌரிக் காப்புப் பாடல்

-கேதாரகௌரி விரதம் -



கேதாரகௌரி விரதம் என்பது சிவபெருமானுக் குரிய விரதங்களில் ஒன்று. கௌதம முனிவரின் கூற்றுப்படி பார்வதிதேவி 21 நாள் "கேதாரேஸ்வர விரதம்" இருந்து சிவனின் பாதி உடலைப்பெற்று இடப்பாகத்தில் அமர்ந்து கொண்டு அர்த்தநாரியா கவும், அர்த்தநாரீசுவராகவும் ஒன்றுபட்ட தினம். சிவனை நினைத்து பார்வதி தேவியாகிய "கௌரி" இவ்விரத்தினை மேற்கொண்டதால் "கௌரி விரதம்" எனப் பெயர் உண்டாயிற்று.

### விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

### வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோல் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்

காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாகக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிகவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமாணியே புனிவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பாராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையை
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே

வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உனதருளே
காசினியில் வேற்றுமையை கணபொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நம்முடனே இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனத்துடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல்லாந் தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முக்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெம்மைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்

# பிரதோஷம்

பிரதோஷம் என்பது சிவபெருமானை வழிபட உகந்ததாகக் கருதப் படும் காலமாகும். சிவபக்தர்களுக்கு பிரதோஷவிரதம் மிகவும் முக்கியமானது. பிற தோஷங்களை நீக்கும் வலிமை பிரதோஷத் திற்கு உண்டு. சிவனுக்கு உகந்த விசேஷங்களில் பிரதோஷமும் ஒன்று. அதிலும் சனிக்கிழமை வரும் பிரதோஷம் மிகவும் சிறப்பு டையது. தோஷம் என்றால் குற்றம். பிரதோஷம் என்றால் குற்ற மற்றது என்பது பொருள்.

வளர்பிறை, தேய்பிறை ஆகிய இரண்டு காலங்களிலும் திரயோதசி திதியில் கதிரவன் மறைவதற்கு முன் 4.30 மணி முதல் 6.00 மணி வரை உள்ள நேரமே பிரதோஷ காலமாகும்.

அரி நாமம் சொல்ல அதிகாலையும், அரண் நாமம் சொல்ல அந்தி நேரமான பிரதோஷமும் மிகவும் சிறப்புடையது என்கிறார் காஞ்சி பரமாச்சாரியார். எம்பெருமான் எல்லாவற்றையும் தன்னிடம் அடக்கிக் கொள்ளும் காலம் பிரதோஷ காலமாகப் போற்றப்படுகிறது. இந்த நேரம் சிவன் உலகத்து சக்தி முழுவதையும் தன்னிடம் ஒடுக்கிக் கொண்டு நர்த்தனம் செய்கிறான்.

திருப்பாற் கடலைக் கடைந்து துன்பமுற்ற தேவர்களின் பொருட்டு விஷத்தை உண்டு திருநீலகண்டராகிய சிவன், அவர்களுக்கு அருள்புரியும் வண்ணம் திரயோதசியன்று மாலை நாலரை மணி முதல் ஏழு மணி வரையுள்ள பிரதோஷ வேளையில் தன் முன்னி ருந்த நந்திதேவரின் இரு கொம்புகளுக்கு இடையில் நின்று, அம்பி கையும் தேவர்களும் பார்க்கும் வண்ணம் நடனம் ஆடினார். அன்று முதல் திரயோதசி திதியன்று மாலை 4.30 மணி முதல் 7.00 மணி நேரம் வரை பிரதோஷ காலமென்று வழங்கலாயிற்று.

**பிரதோஷத்தில் ஐந்து வகைகள்:**

1. **நித்திய பிரதோஷம்:** இது தினமும் வரும் பிரதோஷ காலம். சூரியன் மறைவதற்கு மூன்று நாழிகைக்கு முன்பிருந்த காலம்.
2. **பட்சப் பிரதோஷம்:** ஒவ்வொரு மாதமும் சுக்லபட்ச (வளர்பிறை) காலத்தில் வரும் பிரதோஷம் பட்ச பிரதோஷம் எனப்படும்.
3. **மாதப் பிரதோஷம்:** கிருஸ்ண பட்ச (தேய்பிறை) காலத்தில் வரும் திரயோதசி தினத்தின் மாலை வேளையே மாதப் பிரதோஷம்.

4. மகா பிரதோஷம்: மாதந்தோறும் கிருஸ்ணபட்ச காலத்தில் (தேய்பிறை) வரும் திரயோதசி தினம் சனிக்கிழமையாக அமைந் தால், அது மிகச் சிறப்புடைய பிரதோஷ தினமாகும். இறைவன் அனைவரையும் காக்கும் வண்ணம் ஆலகாலம் உண்டு நீலகண்டன் என நாமம் பெற்ற நாளாகும்

5. **பிரளயப் பிரதோஷம்:** இந்தப் பிரதோஷம் நிகழும் சமயத்தில் சகல *உயிரினங்களும் சிவனுள் அடங்கி இருக்க, சிவன் ஆனந்தத்துடன்* ஊழித் தாண்டவம் புரியும் காலமே பிரளயப் பிரதோஷமாகும்.

இந்த விரதம் அனுட்டிப்போர் காலையில் நீராடி நித்திய கடன்களை முடித்த பின்னர் சிவாலயம் சென்று சிவதரிசனம் செய்தல் சிறப்பாகும். அன்றைய தினம் அடியாரைப் போல இறைவனும் ஆலயத்துள் வலம் வருவார். அண்டசராசரங்கள் யாவும் பிரதோஷ காலங்களில் உமாமகேசனுக்குள் ஒடுங்குவதால், அதை உணர்த்தும் வண்ணம் பிரதோஷ நாயகரான பரமன் தன் தேவியாருடன் சந்திரசேகரராய் இடப வாகனத்தில் திருவுலா வருவார்.

பிரதோஷ காலத்தில் சிவபெருமானை வணங்கும் முறையை பற்றி "கடண்பவன புராணம்" கூறுவதாவது; நந்தியை தரிசனம் செய்து அங்கு நின்று இடப்புறமாக சென்று சண்டிகேஸ்வரரை தரிசனம் செய்து சென்ற வழியே திரும்பி வரவேண்டும். நந்தியை மீண்டும் தரிசனம் செய்து அங்கு நின்று வலமாகச் சென்று கோமுகி எனப்படும் சிவபெருமானின் அபிஷேக நீர் வரும் துவார வழியே தரிசனம் செய்து சென்ற வழியே திரும்பி வரவேண்டும்.

நந்தியை மீண்டும் தரிசனம் செய்து அங்கு நின்று இடப்புறமாக சென்று சண்டிகேஸ்வரரை தரிசனம் செய்து சென்ற வழியே திரும்பி வந்து நந்தியை தரிசனம் செய்து வலமாக வரவேண்டும். திரும்பவும் கோமுகியை தரிசனம் செய்து மீண்டும் வந்த வழியே திரும்பி வந்து நந்தியை தரிசனம் செய்து இடப்புறமாகச் சென்று சண்டிகேஸ்வரரை தரிசனம் செய்து திரும்பி வரவேண்டும்.

பின்னர் வீடு சென்று, ஒருவர் மற்றொருவருக்கு அன்னமிட்டு பிரதோஷ விரதத்தை நிறைவு செய்யலாம். முக்கியமாக பிரதோஷ நாளன்று உபவாசம் இருந்து பரமனை வழிபட்டு, பின்னர் பால், பழம் அருந்தி வெறும் தரையில் உறங்குவதால் விரதத்தின் முழுப்பலனையும் அடையலாம்.

# பிரதோஷ பூசை தோத்திரம்

நமசிவாய நமசிவாய நமசிவாய மந்திரம்
நாவினுக்கு உகந்தநாமம் நமசிவாய மந்திரம்

ஐந்தெழுத்து சிவபெருமான் ஆட்சிசெய்யும் பீடமாம்
ஆறெழுத்து சரவணனும் காட்சிநல்கும் மாடமாம்
நைந்துவாழும் மக்களுக்கு நோய்நொடியைப் போக்கிட
நன்மருந்தைக் கொடுக்கவந்த நீலகண்டன் மந்திரம்

வைத்தியராய்ப் பணிபுரிந்து வையகத்தைக் காக்கவே
வயித்திய நாதனாக வந்துதித்தான் சங்கரன்
பைத்தியமும் பாதகமும் இங்குவந்து சேரமால்
பனிபோல விலகவைக்கும் பரமசிவன் மந்திரம்

தந்தைதாயும் தனயனோடு வாழுகின்ற வீடிது
சந்தனமும் பன்னீரும் கமகமுக்கும் நாடிது
விந்தையோடு வியாதியெல்லாம் வேகமாக ஓடவே
வெற்றிவேலன் துணையிருக்கும் வீரசேகர் மந்திரம்

புள்ளிருக்கும் வேளுரென புனிதமிகு பூமியாம்
பூதநாத கணங்களுக்கும் கனிவு காட்டும் சாமியாம்
வள்ளிதெய்வானையோடு வரங்கொடுக்கும் முருகனை
வளர்த்தெடுத்து நமக்களித்த அம்மையப்பன் மந்திரம்

எமதுதையல் நாயகியாள் நாநிலத்தைக் காக்கவே
நங்கையரைத் தங்கையராய்ப் பேணிமிகப் போற்றிட
தம்முடைய குங்குமமும் திருச்சாந்து மண்ணுமே
சந்நிதியில் வழங்குகின்ற சுந்தரேசர் மந்திரம்

பாலனினைப் போற்றிமகிழ் பாலாம்பாள் மகிழவே
வேலனவன் கோலமிகு சீலமுத்துக் குமரனாய்
ஞாலமீது ஞானமுடன் அய்யனடி பற்றியே
மக்கள்குறை தீர்க்கவந்த சொக்கநாதர் மந்திரம்

## பிரதோஷ தோத்திரம்

ஓம் பவாய நம (பகவானே என்னைக் காப்பாற்று)
ஓம் ருத்ராய நம (என் குற்றங்களைக் களைந்து, என்னைக் காப்பாற்று)
ஓம் மிருடாய நம (என் துன்பங்களை நீக்கி இன்பத்தைத் தந்திடு)
ஓம் ஈசானாய நம (நல்வழி, நற்புகழ் அடைவதற்கு வழி காட்டு)
ஓம் சம்பவே நம (உயர்வடைய வழி எனக்கு காட்டு)
ஓம் சர்வாய நம (தீமையை அழித்து நன்மையை எனக்குத் தந்திடு)
ஓம் ஸ்தாணவே நம (நிலையானவனே என் மனதில் அசையாது நிலைத்திடு)
ஓம் உக்ராய நம (ஆசை, பாசம் எதிலும் நிலையான ஆட்சி செய்பவரே)
ஓம் பார்க்காய நம (பகவானே உனது திரு உருவத்தைக் காட்டிடு)
ஓம் பரமேஸ்வராய நம (பிரகாசமான திருத்தோற்றம் உடையோனே)
ஓம் மகாதேவாய நம (ஒளிமயமான உருவம் கொண்டவரே நமஸ்காரம்)

## நந்தீஸ்வரர்



சிவபெருமானே தனக்கு நிகராக நந்திதேவரை போற்றியுள்ளார். சிவகணங்களுக்குத் தலைவ ராக விளங்குபவர் நந்திதேவர். தேவர்கள் தங்கள் குறைகளைய சிவனை நாடி வந்தபோது, அவர் களது துன்பம் நீங்க பெரிதும் உதவியவரும் இவரே. பின்னர் சிவபெருமான் நந்திதேவரின் இரு கொம்புகளுக் கிடையில் நின்று நடனம் புரிந்ததும் குறிப்பிடத்தக்கது. பிரதோஷ வேளையில் நந்திபெருமானின் இரண்டு கொம்புகளின் நடுப்பகுதி யைத் தொட்டு வணங்கினால் வறுமை, கடன், நோய் நீங்கி சுபிட்ச மாக வாழ்வர். நந்திதேவரை வழிபடும்போது அறுகம்புல் மாலை சாத்தியும், நெய் விளக்கேற்றியும், காப்பரிசியும் வெல்லமும் கலந்து நிவேதனம் செய்வதும், வில்வ இலைகளால் அர்ச்சனை செய்வதும் மிகச் சிறப்பானது. ஆகையால் பிரதோஷ காலங்களில் சிவபெரு மானை வழிபடுவதற்கு முன் நந்தி தேவரை வணங்குதல் வேண்டும். இத் தீபாராதனைக்குப் பின்னர் நந்திதேவரது காதில் பிறர் கேட்காவண்ணம் எமது குறைகளையும், கோரிக்கைகளை யும் கூறுதல் வேண்டும். இவ்வாறு தொடர்ச்சியாகப் பன்னிரண்டு பிரதோஷ வேளைகளில் கூறி வந்தால் காரியபலிதம் நடக்கும் என்பது ஐதீகம்.

## நந்திதேவர் துதி

நந்திஎம் பெருமான்தன்னை நாள்தோறும் வழிபட்டால்
புந்தியில் ஞானம் சேரும் புகழ்கல்வி தேடிவரும்
இவ்வுலக இன்பம்யாவும் இவரடி தொழ உண்டு!
அவ்வுலக அருளும்கூட அவர்துதி பாட உண்டு
முற்பிறவி வினைகள்யாவும் தீயிட்ட மெழுகாகும்
நந்தியின் பார்வை பட நலன்கள் உடன் கிட்டும்!
ஈசனுக்கு எதிர் அமர்ந்து இறைஊஞ்சல் ஆட்டுவிக்கும்
நந்தீசர் நற்பதம் நாம் தொழுவோமே!



## நலம் சேர்க்கும் நந்தீஸ்வரர்

தனக்கு கிடைக்கவேண்டிய வாய்ப்புகள் நழுவாமல் இருப்பதற்கும், புண்ணிய பலன் பெறுவதற்கும் ஓதவேண்டிய பதிகம். பிரதோஷ நாட்களில் அல்லது தினமும் பிரதோஷ வேளைகளில் இந்த சுலோகத்தை சொல்லி வந்தால் வாழ்வில் வளம் பெறலாம். நந்தியினதும். சிவனதும் அருள் ஒருங்கே கிட்டும்.

நந்தீஸ்வரா எங்கள் நந்தீஸ்வரா
நந்தீஸ்வரா எங்கள் நந்தீஸ்வரா

சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி
சேவித்த பக்தர்களைக் காக்கும் நந்தி
கவலைகளை எந்நாளும் போக்கும் நந்தி
கயிலையிலே நடம்புரியும் கனிந்த நந்தி
பள்ளியறைப் பக்கத்தில் இருக்கும் நந்தி
பார்வதியின் சொல்கேட்டுச் சிரிக்கும் நந்தி
நல்லதொரு ரகசியத்தைக் காக்கும் நந்தி
நாள்தோறும் தண்ணீரில் குளிக்கும் நந்தி

செங்கரும்பு உணவு மாலை அணியும் நந்தி
சிவனுக்கே உறுதுணையாய் விளங்கும் நந்தி
மங்களங்கள் அனைத்தையுமே கொடுக்கும் நந்தி
மனிதர்களின் துயர்போக்க வந்த நந்தி
அருகம்புல் மாலையும் அணியும் நந்தி
அரியதொரு வில்வம் ஏற்ற நந்தி
வரும் காலம் நலமாக வைக்கும் நந்தி
வணங்குகிறோம் எமைக்காக்க வருக நந்தி
பிரதோக்ஷ காலத்தில் பேசும் நந்தி
பேரருளை மாந்தருக்கும் வழங்கும் நந்தி
வரலாறு படைத்து வரும் வல்ல நந்தி
வறுமையினை எந்நாளும் அகற்றும் நந்தி
கெட்டகனா அத்தனையும் மாற்றும் நந்தி
கீர்த்தியுடன் குலம் காக்கும் இனிய நந்தி
வெற்றிவரும் வாய்ப்பளிக்க உதவும் நந்தி
விதியினைத்தான் மாற்றிட விளையும் நந்தி
வேந்தன் நகர் நெய்யினிலே குளிக்கும் நந்தி
வியக்க வைக்கும் தஞ்சாவூர்ப் பெரிய நந்தி
சேர்ந்த திருப்புன்கூரிலே சாய்ந்த நந்தி
செவிசாய்த்து அருள் கொடுக்கும் செல்வ நந்தி
கும்பிட்ட பக்தர் துயர் நீக்கும் நந்தி
குடம் குடமாய் அபிசேகம் பார்த்த நந்தி
பொன் பொருளை வழங்கிடவே வந்த நந்தி
புகழ்குவிக்க எம் இல்லம் வருக நந்தி





"தீதும், நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன"

-நாலடியார்

Gowriy Printers, Colombo-13 | 0112432477